www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V10SS

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

வகுப்பு 10

நேரம்: 3.00 மணி | சமூக அறிவியல் | மொத்த மதிப்பெண்கள்: 100

பகுதி - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **14×1=14**
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கை செய்து கொண்டது?
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்

2) ஜப்பானிய கடற்படை அமெரிக்க கடற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?
அ) க்வாடல் கேனல் போர் ஆ) மிட்வே போர்
இ) லெனின் கிராடு போர் ஈ) அலாமெயின் போர்

3) ''சத்யார்த்த பிரகாஷ்'' என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ) தயானந்த சரஸ்வதி ஆ) அயோத்தி தாசர்
இ) அன்னிபெசண்ட் ஈ) சுவாமி சாரதாநந்தா

4) **கூற்று** : பிரிட்டிஷ் அரசு 1857ம் ஆண்டு கிளர்ச்சியை இரும்புகரம் கொண்டு அடக்கியது.
**காரணம்** : மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.
ஆ) கூற்று தவறு காரணம் சரி.
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

5) இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப்பெற்றது?
அ) ஈரோடு ஆ) சென்னை இ) சேலம் ஈ) மதுரை

6) தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் .................
அ) ஊட்டி ஆ) ஆனைமுடி இ) கொடைக்கானல் ஈ) ஜின்டா கடா

7) பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
அ) அயனமண்டல பசுமைமாறாக் காடுகள் ஆ) இலையுதிர் காடுகள்
இ) மாங்குரோவ் காடுகள் ஈ) மலைக்காடுகள்

8) இந்தியாவில் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது .................
அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை

9) இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள் எது?
அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள் இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்

10) தமிழ்நாட்டில் உள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை
அ) 3 மற்றும் 15 ஆ) 4 மற்றும் 16 இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15

11) நடுவன் அரசின் அரசியலமைப்புத் தலைவர் யார்? ................. ஆவார்.
அ) குடியரசுத்தலைவர் ஆ) தலைமை நீதிபதி
இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு

12) பொருந்தாத ஒன்றினை கண்டுபிடி.
அ) சமூகநலம் ஆ) சுகாதாரம்
இ) ராஜதந்திரம் ஈ) உள்நாடு விவகாரங்கள்

13) வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா ................. அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.
அ) 1வது ஆ) 3வது இ) 4வது இ) 2வது

14) **சரியான கூற்றை எழுதுக:**
GST பற்றி கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானது?
i) GST ஒருமுனை வரி.
ii) இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்படும் அனைத்து நேரடி வரிகளையும் மாற்றுவதை நோக்கமாக கொண்டது.
iii) இது ஜூலை 1, 2017 முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது.
iv) இந்தியாவில் வரி கட்டமைப்பை ஒன்றிணைக்கும்.
அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (ii), (iii), (iv) சரி
இ) (i), (iii) மற்றும் (iv) சரி ஈ) அனைத்தும் சரியானது

பகுதி - II **10×2=20**

குறிப்பு: **எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15) பதுங்கும் குழிப்போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
16) முதல் கலகப்போருக்கு பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?
17) திருச்சிராப்பள்ளி பிரகடனத்தில் முக்கிய கூறுகளை கூறுக.
18) ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
19) இந்திய ... போராட்டத்தில் அன்னிபெசன்ட் பங்களிப்பு யாது?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



20) இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை கூறுக.
21) 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?
22) இந்தியாவின் வேளாண் பருவங்களை குறிப்பிடுக.
23) தகவல்தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
24) தேரி என்றால் என்ன?
25) உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?
26) கலடன் பன்முக மாதிரி போக்குவரத்து திட்டம் பற்றி நீவிர் அறிவது யாது?
27) மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?
28) பசுமைப்புரட்சியின் தாக்கத்தை எழுதுக.

## பகுதி - III

**10×5=50**

**குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
i) சமூக ஜனநாயக கட்சியை நிறுவியவர் ............
ii) சோட்டா நாக்பூர் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ............
iii) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மதிப்புகளுக்கு இடையிலுள்ள வேறுபாடு ............ என அழைக்கப்படுகிறது.
iv) இந்தியா, தென்கிழக்கு ஆசியாவிற்குள் செல்வதற்கான ஒரு நுழைவு வாயிலாக ............ இருக்கிறது.
v) ஆசியாவின் டெட்ராய்டு என அழைக்கப்படுவது ............
30) முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதி.
31) வேலூரில் 1806-ல் வெடித்த புரட்சியின் கூறுகளை விவரி.
32) காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணங்கள் என்ன என்பதை ஆராயவும்.
33) **வேறுபடுத்துக:**
1. வானிலை மற்றும் காலநிலை
2. புதுப்பிக்க கூடிய வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலாத வளம் காரணம் கண்டறிக.

**காரணம் கண்டறிக:**
மேற்கு நோக்கி பாயும் நதிகள் டெல்டாவை உருவாக்குவதில்லை.
34) கங்கை ஆற்றின் வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.
35) இந்திய தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் யாவை?
36) காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.
37) இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
38) இந்திய வெளியுறவு கொள்கையை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
39) உலகமயமாக்கலின் சவால்கள் யாவை?
40) கருப்புபணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.

**குறிப்பு: பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் நிகழ்வுகளையும், இடங்களையும் குறிப்பிட்டு காட்டுவதற்கு பதிலாக அவற்றை பற்றிய குறிப்புகளை மட்டும் எழுத வேண்டும்.**

41) 1910 முதல் 1930 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42) **இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
(i) குவாலியர் (ii) கான்பூர் (iii) சௌரி சௌரா (iv) டினே (v) வேதாரண்யம்

## பகுதி - IV

**2×8=16**

**குறிப்பு: பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

43) அ) ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.

**(அல்லது)**

ஆ) நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூகநீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.

**குறிப்பு: பார்வையற்ற மாணவர்கள் வரைபட தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.**

44) அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
i) காரகோரம் ii) தக்காண பீடபூமி
iii) கட்ச் வளைகுடா iv) பருத்தி விளையும் பகுதி
v) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை vi) கிருஷ்ணா ஆறு
vii) மேற்குத்தொடர்ச்சி மலை viii) இந்திரா முனை
ix) மும்பை-கொல்கத்தா செல்லும் இரயில் பாதை
x) விசாகப்பட்டினம் துறைமுகம்

**(அல்லது)**

ஆ) **கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
i) மன்னார் வளைகுடா ii) சேலம்
iii) கிழக்குத்தொடர்ச்சி மலை iv) பழனி மலை
v) நெல் விளையும் பகுதி vi) நீலகிரி
vii) வங்காள விரிகுடா viii) தாமிரபரணி ஆறு
ix) வேடந்தாங்கல் x) கரூர்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com